மாண்பமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பழனி.

**முன்னிலை: திரு.எம்.பொன்பாண்டி, பி.ஏ.,பி.எல்.,**

**நீதித்துறை நடுவர், பழனி**

2026 ம் வருடம் மார்ச் மாதம் 13 ம் நாள் வெள்ளிக்கிழமை

**<u>சி.ஆர்.எல்.எம்.பி.எண். 206/2026</u>**

சூர்யபாண்டி வயது 26/26,
த/பெ.சிவக்குமார்,
1965, குறும்பபட்டி,
கிழக்கு பாட்டாளிதெரு,
பழனி தாலுகா.

... மனுதாரர் /1 வது எதிரி

எதிராக

சார்பு ஆய்வாளர்,
பழனி நகர் காவல் நிலையம்,
குற்ற எண். 173/2026
சட்டப்பிரிவுகள் 20(b)(ii)(A),25,8(c) NDPS Act,
4(1)(c)TNP Act.

... எதிர்மனுதாரர் / புகார்தாரர்

<u>1 வது எதிரி காவல்படுத்தப்பட்ட நாள்: 05.03.2026</u>

நீதிமன்ற காவலில் உள்ள 1 வது எதிரியை பிணையில் விடுவிக்கக்கோரி 1 வது எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.ஆர்.மோகன்குமார் அவர்கள் பிரிவு 480 BNSS ன்படி இப்பிணை மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

இப்பிணை மனு இன்று என் முன்னர் விசாரணைக்கு வந்த போது, எதிர்மனுதாரர் தரப்பில் அரசு குற்றத்துறை வழக்கறிஞர் நிலை 2 திரு.ப.பார்த்திபன் அவர்கள் ஆஜராகியும், 1 வது எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.ஆர்.மோகன்குமார் அவர்கள் ஆஜராகி வாதிட்டதைக் கேட்டறிந்தும், வழக்கின் ஆவணங்களைப் பரிசீலனை செய்தும், இன்று வரை என்னுடைய பரிசீலனையிலிருந்தும் வந்த இந்த மனுக்களில், இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

**<u>உத்தரவு</u>**

1. மனுதாரர் / 1 வது எதிரி தரப்பு வழக்குரைஞர் சார்பில் பிரிவு 480 BNSS ன் படி இப்பிணை மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. மனுதாரர் /1 வது எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றம் சட்டப்பிரிவுகள் 20(b)(ii)(A),25,8(c) NDPS Act, 4(1)(c)TNP Act ன் படியான குற்றமாகும்.

3. <u>மனுதாரர் / 1வது எதிரி தரப்பு வாதம் :</u>

**மனுதாரர் / 1வது எதிரி தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்குரைஞர்** அவர் தரப்பு வாதத்தில், 1வது எதிரி கடந்த 05-03-2026ம் தேதி கைது செய்யப்பட்டு நீதிமன்ற காவலுக்கு அனுப்பப்பட்டுள்ளார் என்றும், 1வது எதிரியின் மீது பொய் வழக்கு புனையப்பட்டுள்ளது என்றும், மனுதாரர் / 1வது எதிரி நிரந்தர முகவரி கொண்டவர் என்றும், சட்டத்தினை மதிக்கக்கூடிய நபர் என்றும், எங்கும் தலைமறைவாகமாட்டார் என்றும், நீதிமன்றம் பிறப்பிக்கும் நிபந்தனைகளை பின்பற்றி நடக்க மனுதாரர் தயாராக இருப்பதாகவும், எனவே மனுதாரரை பிணையில் விடுவிக்கவேண்டியது அவசியம் என வாதிடப்பட்டுள்ளது.

4. <u>அரசு தரப்பு வாதம்</u> :

அரசு தரப்பில் கொடுக்கப்பட்டுள்ள பதிலில் 1வது எதிரி கடந்த 05.03.26ம் தேதி கைது செய்யப்பட்டு நீதிமன்ற காவலில் இருந்து வருகிறார் எனவும், 1வது எதிரியை பிணையில் விட்டால் இதே போன்ற குற்றச் செயல்களில் ஈடுபடக்கூடும் என்பதாலும், விசாரணைக்கு ஆஜராகாமல் இருக்கக்கூடும் என்பதாலும், 1வது எதிரியை பிணையில் விட கடுமையான ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டுள்ளது.

5. **இருதரப்பும் கேட்கப்பட்டது.** வழக்கு ஆவணங்கள் யாவும் இந்நீதிமன்றத்தால் கவனமாக பரிசீலினை செய்யப்பட்டது. மேற்படி மனுதாரர் / 1வது எதிரியின் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டானது பிரிவுகள் 20(b)(ii)(A),25,8(c) NDPS Act, 4(1)(c)TNP Actன் படியான குற்றமாகும். மனுதாரர் / 1வது எதிரி கடந்த 05.03.2026ம் தேதி கைது செய்யப்பட்டு இந்நீதிமன்ற உத்தரவின் படி நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். 1வது எதிரி தரப்பில் வழக்கு விசாரணைக்கு ஒத்துழைக்கவும் நீதிமன்ற நிபந்தனைகளை பின்பற்றி நடக்க தயாராக உள்ளதாக கூறப்படுவதாலும், **மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வாதத்தை கருத்தில் கொண்டும், இந்நீதிமன்றம் கீழ்கண்ட நிபந்தனைகளின் பேரில் மனுதாரர்/1வது எதிரிக்கு பிணை வழங்கி உத்தரவிடுகின்றது.**

**அ) 1வது எதிரி தங்களுக்காக ரூ.25,000/-க்கு பிணைப் பத்திரம் எழுதிக் கொடுக்க வேண்டும். அதே தொகைக்கு மனுதாரர் / 1வது எதிரியின் உறவினர்கள் அல்லது நண்பர்கள் என இருநபர்கள் பிணை பத்திரம் எழுதிக் கொடுக்க வேண்டும். பிணையதாரர்கள் பிணை பத்திரத்தில் அவர்களது சமீபத்திய புகைப்படத்தினை ஒட்ட வேண்டும். மேலும் பிணையதாரர்களின் ஆதார் கார்டு அல்லது அவர்களது அடையாளத்தை காட்டக் கூடிய வேறு அடையாள அட்டைகளின் புகைப்பட நகலினை தாக்கல் செய்ய வேண்டும்.**

**ஆ) மேலும் 1வது எதிரி நீதிமன்றக் காவலில் இருந்து வெளியில் வந்த மறுநாள் முதல் தினமும் காலை 10.00 மணிக்கும், மதியம் 1.00 மணிக்கும் மற்றும் மாலை 05.00 மணிக்கும் எதிர்மனுதாரர் காவல் நிலையத்தில் நேரில் ஆஜராகி தொடர்ந்து மறு உத்தரவு வரும் வரை கையெழுத்திட வேண்டும்.**

**ஈ) மனுதாரர் / 1வது எதிரி எவ்வகையிலும், புலன் விசாரணைக்கோ, இவ்வழக்கின் விசாரணைக்கோ அல்லது வழக்கின் நிகழ்நிலை புகார்தாரருக்கோ இடையூறு செய்யக் கூடாது.**

**உ) மேற்படி நிபந்தனைகளை மீறும் பட்சத்தில் மாண்பமை உச்ச நீதிமன்றத்தின் P.K.Shaji Vs. State of Kerala (2005 AIR S.C.W 5560) என்ற முன்தீர்ப்பின் படி இந்நீதிமன்றமோ, அல்லது விசாரணை நீதிமன்றமோ, மனுதாரர் / 1வது எதிரி மீது சட்டப்படியான நடவடிக்கை மேற்கொள்ளும்.**

**ஊ) மனுதாரர் / 1வது எதிரி ஜாமீனில் இருந்து வெளியில் வந்து, வழக்கு விசாரணைக்கு ஆஜராகாமல் தலைமறைவாகினால், அவர் மீது பாரதிய நியாய சன்ஹிதா பிரிவு 269 BNS ன் கீழ் புதிய முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய நேரிடும்.**

2026 ம் ஆண்டு மார்ச் மாதம் 13 ம் நாள் வெள்ளிக்கிழமை திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

M PONPANDI

Digitally signed by M PONPANDI
Date: 2026.03.13 17:56:22 +0530

நீதித்துறை நடுவர்,
பழனி.